අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/03/53/2/15/2021 ඔබේ යොමුව / உமது இல. / Your Ref. දිනය / திகதி / Date 2021.10.15

உயர் தர தொழிற்பாடத்துறையை நடைமுறைப்படுத்தும் சகல பாடசாலை அதிபர்களுக்கும்,

**உயர் தர தொழிற்பாடத்துறையை (பதின்மூன்று வருட உத்தரவாதமளிக்கப்பட்ட கல்வி வேலைத்திட்டம்) பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தல்.**

உயர்தர தொழிற்பாடத்துறை தற்போது அமுலில் இருக்கும் பாடசாலைகள் மற்றும் உயர் தரம் 2021 இலிருந்து நடைமுறைப்படுத்த உத்தேசித்திருக்கும் (ஐந்தாம் கட்டம்) பாடசாலைகளுக்கு, **தொழிற்பாடத்துறைக்கு மாணவர்களை அனுமதித்து 2021ம் ஆண்டு தரம் 12 வகுப்புக்களை ஆரம்பித்து கற்கை நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் செயற்பாடுகளை விரைவில் மேற்கொள்ள வேண்டியுள்ளது.** இதற்குரிய கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆலோசனைகள் தொடர்பாக தங்களது கவனத்தை செலுத்துவதற்கும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் இக் கடிதத்தை அனுப்புகின்றேன்.

## 2. பாடசாலை செயற்பாடுகளின் ஒருங்கிணைப்பு

தொழிற்பாடத்துறைக்குரிய விடயங்கள் தொடர்பாக கல்வி அமைச்சு, மாகாணம், வலயம், கோட்டம் மற்றும் ஏனைய தரப்பினருடன் பாடசாலை தொடர்புகளைப் பேணுதல் மற்றும் பாடசாலையில் இப்பாடத்துறை தொடர்பான விடயங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்துவதற்காக **தொழிற்பாடத்துறைக்கான ஒருங்கிணைப்பு ஆசிரியர் ஒருவரை நியமித்துக்கொள்ளுமாறு** பரிந்துரைக்கப்படுகின்றது.

## 3. மாணவர்களை அனுமதித்தல்

3.1. **2020ம் ஆண்டு க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய மாணவர்கள்** இப் பாடத்துறையின் கீழ் தரம் 12இல் அனுமதிக்கப்படல் வேண்டும். பாடசாலைக்கு அனுமதிக்கக்கூடிய வயதெல்லையை தாண்டியிராவிடின் **முந்தைய வருடங்களில் க.பொ.த (சா.த) பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களையும் அனுமதிக்க முடியும்** என்பதுடன் தரம் 11 அல்லது அதற்கு முந்திய தரங்களில் இருக்கும் போது பாடசாலையிலிருந்து இடைவிலகிய மாணவர்கள் இப்பாடத்துறையில் இணைந்துகொள்ள அனுமதி கோரும் போது அம்மாணவர்களுக்கு அதனால் ஏற்படக்கூடிய நன்மைகளைக் கருத்திள்கொண்டு அம்மாணவர்கள் தரம் 12ல் கற்பதற்குரிய வயதை அடைந்திருப்பின் தொழிற்பாடத்துறையில் அவர்களை இணைத்துக் கொள்வதற்கான சந்தர்ப்பத்தை அதிபரால் ஏற்படுத்திக் கொடுக்க முடியும்.

3.2. இதன்போது உரிய பாடசாலையில் மட்டுமல்லாது பிரிதொரு அரச, தனியார் அல்லது சர்வதேச பாடசாலையிலிருந்து அல்லது தனியாக சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கும் அனுமதி வழங்கப்பட முடியும் என்பதுடன், பாடசாலைக்காக அங்கீகரிக்கப்பட்டுள்ள **வகுப்பறைகளின் எண்ணிக்கைக்கு பொருந்தக்கூடிய மாணவர் தொகையினை அனுமதிப்பதற்கு** அதிபர் முயற்சிக்க வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட மாணவர் தொகையினருக்கு அனுமதி வழங்குவதற்காக பிரதேசத்திலுள்ள ஏனைய பாடசாலைகள், பாடசாலை சமூகம், மாணவர் சமூகம் மற்றும் பெற்றோர், பாதுகாவலரை இது தொடர்பாக அறியப்படுத்துவது பாடசாலையின் பொறுப்பாகும்.

ගරු අමාත්‍යතුමා / கௌரவ அமைச்சர் / Hon. Minister +94112784832 +94112784825 minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary +94112784811 +94112785162 secretary.education@moe.gov.lk

3.3. க.பொ.த சாதாரண தர பெறுபேறானது **மாணவர்களை அனுமதிப்பதற்கான அத்தியாவசிய ஆவணமொன்றல்ல** என்பது வலியுறுத்தப்படுகின்றது.

3.4. **மாணவர்களை அனுமதிப்பதற்காக உபயோகிக்கக்கூடிய விண்ணப்பப்படிவமொன்றின் மாதிரி** இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது **(இணைப்பு 01).** இதன் மென்பிரதி கல்வி அமைச்சின் இணையத்தளத்தின் (https://moe.gov.lk/) விசேட அறிவுறுத்தல்கள் பகுதியின் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

3.5. இப் பாடத்துறையில் இணைந்துகொள்ள எதிர்பார்க்கும் மாணவரொருவர் தான் க.பொ.த(சா.த) பரீட்சைக்கு தோற்றிய பாடசாலையிலிருந்து மாணவர் செயலாற்றுகைப் படிவத்தை பெற்றுக்கொள்ள இயலாத சந்தர்ப்பங்களில் தற்காலிக கோவை ஒன்றில் அவ்வாறான மாணவர்களது விபரங்களை பதிவுசெய்து அவர்களை இணைத்துக்கொள்ள முடியும். உரிய மாணவர் செயலாற்றுகைப் படிவத்தைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் ஏனைய மாணவர்களைப் போன்று சாதாரண முறையில் அனுமதி செயற்பாடுகளை மேற்கொள்ள முடியும்.

3.6. இப் பாடத்துறையில் அனுமதிக்கப்படும் மாணவர்கள் ஏனைய மாணவர்களைப் போன்றே கருதப்படுவர் என்பதனால் அவர்களும் மாணவர்களுக்கான சீருடை உட்பட **பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கும் சகல வரப்பிரசாதங்களையும் பெற்றுக்கொள்ள உரித்துடையவர்களாவர்.** அதே போன்று பாடசாலை விளையாட்டு அணிகள் மற்றும் ஏனைய பாடசாலை அணிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உரிமை உட்பட விளையாட்டு, இணைப்பாடவிதானங்கள் மற்றும் பாடவிடயம் சாரா செயற்பாடுகள் உட்பட **பாடசாலை மாணவர்கள் கலந்துகொள்ளும் சகல செயற்பாடுகளிலும் கலந்துகொள்ளும் உரிமை இம்மாணவர்களுக்கும் உரித்தாகும்**.

3.7. தரம் 12ல் பாடசாலையில் கற்று தரம் 13ல் தொழில்பயிற்சி நிறுவனமொன்றிற்கு இணைப்புச் செய்யப்படும் மாணவர்களிடமிருந்து **ஒரு வருடத்துக்குரிய வசதிகள் மற்றும் சேவைகள் கட்டணம் மற்றும் பாடசாலை அபிவிருத்திக் சங்க உறுப்பினர் கட்டணம் ஆகியவற்றை அறவிடமுடியும்.** இதன்போது பொருளாதார நெருக்கடிகள் உள்ள மாணவர்களை கிராம அலுவலகரிடமிருந்து பரிந்துரையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அவர்களிடமிருந்து அக் கட்டணங்களை அறவிடாதிருக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

3.8. பாடத்துறையின் அடுத்தகட்ட நடவடிக்கைகளுக்காக அனைத்து மாணவர்களிடமும் தமது **தேசிய அடையாள அட்டை மற்றும் இலங்கை வங்கியின் சேமிப்பு கணக்கொன்று கட்டாயம் இருத்தல் வேண்டும் என்பதால்,** மாணவர்களுக்கு அனுமதி வழங்கியதன் பின்னர், **அடையாள அட்டை/ வங்கிக் கணக்கு** இல்லாத மாணவர்கள் அவற்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்துதல் வேண்டும்.

## 4. வகுப்பறை மற்றும் உபகரணங்கள்

4.1. பாடசாலையில் தொழிற்பாடத்துறையின் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ள திறன் வகுப்பறைகளுக்கு **ஒரு திறன் வகுப்பறையில் 35 மாணவர்களுக்கு போதுமான எண்ணிக்கையில்** எழுதும் பலகையுடன் கூடிய கதிரைகள், ஆசிரியர் மேசை, ஆசிரியர் கதிரை, கணணி மேசை மற்றும் கதிரை போன்றவையும் தொழில்நுட்ப உபகரணங்கள் போன்றவை (கணணி, திறன் பலகை ஆகியன) கல்வி அமைச்சினூடாக பாடசாலைகளுக்கு வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இவ் அனைத்து உபகரணங்களும் பிரதானமாக **மாணவர்களது கற்றல் செயற்பாடுகளுக்காக உபயோகிப்பதற்காகவே**

**வழங்கப்படுகின்றது**. ஆகையால் **மாணவர்கள் எந்நேரமும் இதனூடாக பயன் பெறக்கூடிய வகையில்** மற்றும் **தொழிற்பாடத்துறைக்கான செயற்பாடுகளுக்கு கட்டாயம் முன்னுரிமை** வழங்கி **உயர் வினைதிறனுடன் கூடியதாக இவ் உபகரணங்களை உபயோகிக்கச் செய்வதற்கான** பொறுப்பு அதிபரையே சாரும்.

4.2. அடிப்படையான தளபாடங்கள் மற்றும் உபகரணங்களுடன் கூடிய **வகுப்பறை அமையப்பெற வேண்டிய முறை** இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 02)

4.3. COVID தொற்றுநோய் நிலைமையின் கீழ் கட்டடங்களை நிர்மாணித்தல் மற்றும் திருத்தச் செயற்பாடுகள் மட்டுமல்லாது உபகரணங்களது பெறுகைச் செயற்பாடுகளில் தாமதம் ஏற்பட்டிருப்பினும், தொழிற்பாடத்துறையில் கற்பதனூடாக மாணவர்களுக்கு, சமூகத்துக்கு மற்றும் பாடசாலைக்கு ஏற்படக்கூடிய நன்மைகளை கருத்திள்கொண்டு ஆகக் குறைந்தளவு வசதிகளின் கீழேனும் தரம் 12ற்கான மாணவர் அனுமதிச் செயற்பாடுகளை மேற்கொள்வது மிகவும் பொருத்தமாகும்.

## 5. <u>கற்கைச் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல்.</u>

### 5.1. <u>பாடசாலைகளில் தொழிற்பாடத்துறையை நடைமுறைப்படுத்துவதற்கான மாதிரித் திட்டம்</u>

உயர்தர தொழிற்பாடத்துறையை நடைமுறைப்படுத்துவது தொடர்பான மாதிரித் திட்டம் கீழே வழங்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு பாகங்கள் தொடர்பாகவும் மேலதிக விபரங்கள் இங்கு **A** மற்றும் **B** பகுதிகளில் வழங்கப்பட்டுள்ளது.

| தரம் | பாகம் |
|---|---|
| <u>**மாணவர்களை அனுமதித்தல்.**</u> | |
| **தரம்** 12 | **மாணவர்களை இனங்காணல்** (மாணவர் திறமை, திறன், சமூக உளவியல் நிலைமைகள், பொருளாதார பிரச்சனைகள், கற்றல் குறைபாடுகள் மற்றும் ஊனமுற்ற மாணவர்கள்) மற்றும் **உரியவாறு தொழில் வழிகாட்டல்களை வழங்குதல். மாணவர்களை பயிற்றுவிக்க உகந்த தொழில் பயிற்சிப் பாடநெறிகளை இனங்காணல்**<br>↓<br>தொழிற்பயிற்சி நிறுவனம் மற்றும் மாணவர்களை ஒன்றிணைத்து ஆரம்ப பதிவுச் செயற்பாடுகளை மேற்கொள்ளல்.<br>↓<br>தொழிற் பயிற்சி ஆரம்பிக்கும் வரையில்<br>• மென் திறன்களை அபிவிருத்தி செய்வதற்காக பொதுப் பாடங்களை நடைமுறைப்படுத்தல்<br>• மாணவர்களுக்கு தொழிற் பாடங்கள் 3 ஐ அறிமுகம் செய்தல்<br>↓<br><u>மாணவர்களை தொழில் பயிற்சிக்காக நிறுவனமயப்படுத்தல்.</u><br>↓ |
| **தரம்** 13 | **தொழில் பயிற்சி** (NVQ 04)<br><br>பயிற்சி நிறைவடைந்ததன் பின்னர்<br>• மாணவர்களது NVQ மதிப்பீட்டை மேற்கொள்ளல்.<br>• மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்குதல்.<br>↓ |
| <u>**பாடசாலையால் மாணவர்களது செயல்திறன், மாணவர் செயலாற்றுகைப் படிவமொன்றை வழங்குதல்**</u> | |

## A. தரம் 12

5.2. தரம் 12 இல் பாடசாலைக்கு அனுமதிக்கப்படும் மாணவர்கள், **2020 ஜனவரி மாதம் முதல் ஜூலை மாதம் வரையான காலப்** பகுதிக்குள் NVQ 04 மட்டத்துடன் கூடிய தொழில் பயிற்சியொன்றுக்காக நாடெங்கிலும் உள்ள தொழில் பயிற்சி நிலையங்களுடன் இணைப்புச் செய்யப்படுவர். இவ்வாறாக **மாணவர்கள் தொழில் பயிற்சிக்கு இணைப்புச் செய்யப்படமுன்னர் பாடசாலையில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கற்கை செயற்பாடுகளை நிறைவுசெய்தல் வேண்டும்.**

a. தொழில் வழிகாட்டலூடாக மாணவர்களுக்கு மிகவும் பொருத்தமான NVQ 04 பாடநெறியை இனங்காணல்.
b. மென் திறன் அபிவிருத்திக்காக பொது பாடங்களை நடைமுறைப்படுத்தல்.
c. மாணவர்களுக்கு தொழிற்பாடங்கள் மூன்றை அறிமுகம் செய்தல்.

5.3. தொழில் வழிகாட்டலூடாக மாணவர்களுக்கு மிகவும் பொருத்தமான NVQ 04 பாடநெறியை இனங்காணல்

a. மாணவர் கற்க பொருத்தமான தொழிற் தகைமைச் சட்டகத்தின் நான்காம் 04 மட்ட (National Vocational Qualification - Level 04 **(NVQ 04)) தொழில் பயிற்சிப் பாடநெறியொன்றை தெரிவுசெய்வதற்காக தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சியொன்றை நடாத்தும் பொறுப்பை பாடசாலை ஆசிரியர்கள்** ஏற்க வேண்டும்.

b. ஆசிரியர் ஒவ்வொரு மாணவருக்கும் விசேடத்துவம் மிக்க **திறமைகள்**, **பலங்கள், பலவீனங்கள், சமூக உளவியல் நிலைமை, சமூக பொருளாதார பின்னனி, மற்றும் கலாச்சார விழுமியங்களுக்கு அமைவான மற்றும் தனித்துவமானதான தொழில் வழிகாட்டல்** ஒன்றினூடாக மாணவர்களுக்கு ஆலோசனை வழங்கவேண்டும். இதன்போது **பாதகமான நிலைமையிலுள்ள மாணவர் குழுக்களை இனங்காணுவது** மிகவும் முக்கியமாகும்.

i. தொழில் வழிகாட்டலுக்காக தேசிய கல்வி நிறுவகத்தினால் தயாரிக்கப்பட்டுள்ள தொழில் வழிகாட்டல் இதவடிவத்தை உபயோகிக்க முடியும்.
ii. இதற்காக பொருத்தமான நிகழ்நிலை வளங்களைக் (பத்திரிகைகள், ஆவணங்கள், கையேடுகள், காணொளிகள் போன்றன) கொண்ட கோவை ஒன்றுக்கு (A/L Vocational Stream - Online Resource Repository) ஆசிரியர்கள் பிரவேசிக்க அனுமதி வழங்கப்படும்.
iii. மேலும் மாணவர்களுக்கும் தகவல் பத்திரிகைகள், காணொளிகள் மற்றும் இணையத்தளங்களூடாக தகவல்களை பெற்று கற்றுக்கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படலாம்.
iv. இதற்கு மேலதிகமாக COVID நிலைமையின் கீழ் வழங்கப்பட்டுள்ள சுகாதார பாதுகாப்புமிக்க வழிமுறைகளை பின்பற்றி உரிய பயிற்சி நிறுவனங்கள் மற்றும் தொழிற்பேட்டைகளுக்கு மாணவர்களை களப் பயணத்துக்கு அழைத்துச் செல்லலுதல் மற்றும் பொருத்தமான வளவாளர்களைக் கொண்டு பாடசாலையின் நிகழ்ச்சிகளை நடாத்துதல் போன்றவற்றை மேற்கொள்ள முடியுமாயின் அவற்றுக்கான ஏற்பாடுகளை செய்ய முடியும்.
v. மேலும் இதற்காக ஆசிரியர்கள் திறன் அபிவிருத்தி அமைச்சின் கீழ் நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட தொழில் வழிகாட்டல் உத்தியோகத்தரின் உதவியையும் பெற்றுக்கொள்ள முடியும்.

vi. தொழில் வழிகாட்டல் உட்பட முக்கிய விடயங்கள் பற்றியதான ஆசிரியர் வாண்மை அபிவிருத்தி பயிற்சி நெறியொன்று கல்வி அமைச்சினூடாக எதிர்வரும் காலங்களில் நடாத்தப்படும்.

c. **மாணவர்கள் தெரிவுசெய்யக்கூடிய NVQ 04 பாடநெறிகளின் பட்டியல்** இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. **(இணைப்பு 03)** NVQ 04 பாடநெறிகள் ஆகக் குறைந்தது ஒரு வருடம் நடைபெறும் என்பதுடன், பாடநெறியின் தன்மைக்கேற்ப இதன் காலம் 2 ½ வருடங்கள் வரையில் நீடிக்க முடியும். இப் **பாடநெறிக் காலம் மற்றும் பாடநெறியின் விசேடத்துவம் தொடர்பாக மேற்படி இணைப்பில்** குறிப்பிடப்பட்டுள்ளது. தொழில் வழிகாட்டல்களை வழங்கும்போது மற்றும் பாடநெறிகளைத் தெரிவு செய்யும்போது **<u>இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகளுக்கு மற்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட அம்சங்களது வரையரைக்குட்பட்டதாக இருத்தல் அத்தியாவசிமாகும்.</u>**

d. மேற்படி சகல பாடநெறிகளும் தொழில்பாடத்துறையினூடாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள தொழிற் பாடங்களில் (6.4 ஐ பார்க்கவும்) ஒன்றுடனேனும் தொடர்புபட்டதாகும். **எவரேனும் ஒரு மாணவருக்குப் பொருத்தமான தொழிற் பயிற்சிப் பாடநெறிக்குரிய பாடம் அப் பாடசாலையில் நடைபெறாவிட்டாலும், மாணவர் அப் பாடநெறியைக் கற்பதற்குள்ள தகைமையை விமர்சனரீதியாக மதிப்பீடு மேற்கொண்டு அம் மாணவருக்காக பாடசாலையூடாக அப்பாடநெறியை பரிந்துரைக்க முடியும்.** (உ+ம்: பாடசாலையில் உடற்கல்வி மற்றும் விளையாட்டு பாடம் நடைபெறாவிட்டாலும் தேசிய மட்ட விளையாட்டுக்களில் வெற்றியீட்டிய ஒரு மாணவராயின் Sports Trainer போன்ற NVQ பாடநெறியொன்றை பொருத்தமாயின் பரிந்துரைக்கலாம்). இவ்வாறான சந்தர்ப்பங்களில் உரிய பாடத்துக்குரிய இதவடிவத்தைப் பெற்று மாணவருக்கு அப் பாடம் பற்றிய அடிப்படை அறிமுகமொன்றையேனும் வழங்குவதற்கான முயற்சிகளை பாடசாலை மேற்கொள்ள வேண்டும்.

e. **தொழில் வழிகாட்டல்களூடாக மாணவர் கற்பதற்காக தெரிவு செய்த தொழில் பயிற்சிப் பாடநெறி பற்றி கல்வி அமைச்சுக்கு அறிவித்தல் வேண்டும்.**

5.4. <u>மென் திறன்களை அபிவிருத்தி செய்வதற்காக பொதுப் பாடங்களை நடைமுறைப்படுத்தல்.</u>

பாடத்துறையில் கற்பதற்காக அனுமதிக்கப்படும் மாணவர்களது மென் திறனை அபிவிருத்தி செய்வதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள **பொதுப் பாடங்களை பாடசாலையில் நடைமுறைப்படுத்தல் வேண்டும்.** இதற்காக தேசிய கல்வி நிறுவகத்தால் தயாரிக்கப்பட்டுள்ள பாடம் சார் இதவடிவங்களை உபயோகிக்கலாம்.

- தாய் மொழி (தமிழ்/ சிங்களம்)
- வணிகம் மற்றும் ஆங்கில தொடர்பாடல் திறன்கள்
- அழகியலை நயத்தல்.
- தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப திறன்கள்
- குடியுரிமைத் தேர்ச்சிகள்
- சமூக நலனுக்கான சுகாதாரமும் வாழ்க்கைத் தேர்ச்சிகளும்.
- முயற்சியான்மைத் திறன்கள்
- விளையாட்டு மற்றும் ஏனைய இணைப்பாடவிதான நிகழ்ச்சிகள்
- தொழில் வழிகாட்டல் (6.2ன் கீழ் மேலதிக ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன)

5.5.

5.6. <u>மாணவர்களுக்கு தொழிற் பாடங்கள் 3ஐ அறிமுகம் செய்தல்.</u>

தொழிற்பாடத்துறையின் கீழ் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொழிற் பாடங்கள் 26 அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. இப் பாடங்களுள் தங்களது பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் அண்ணளவாக 6-10 தொழில் பாடங்களில் இருந்து **ஒவ்வொரு மாணவருக்கும் தான் தெரிவுசெய்த NVQ பாடநெறிக்கு ஏற்ற பாடங்கள் 3 ஐ தொடர்பான அறிமுகமொன்றை வழங்கவேண்டும்.** இதற்காக தேசிய கல்வி நிறுவகத்தினூடாக தயாரிக்கப்பட்டுள்ள பாடம் சார் இதவடிவங்களை உபயோகிக்க முடியும்.

1) குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு
2) சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு
3) உடல் கல்வி மற்றும் விளையாட்டு
4) அரங்கற் கலை
5) நிகழ்ச்சி முகாமைத்துவம்
6) கலை மற்றும் கைவினை
7) உள்ளக வடிவமைப்பு
8) நவநாகரீக வடிவமைப்பு
9) வரைபட வடிவமைப்பு
10) சுற்றுலா மற்றும் விருந்தோம்பல்
11) தரை அழகு வடிவமைப்பு
12) பிரயோக தோட்டக்கலை விஞ்ஞான தொழில்நுட்பம்
13) கால்நடை உற்பத்தி தொழிநுட்பக் கல்வி
14) உணவு உற்பத்தித் தொழிநுட்பக் கல்வி
15) நீர்வளத் தொழிநுட்பக் கல்வி
16) பெருந்தோட்ட பயிர்ச்செய்கை உற்பத்தித் தொழிநுட்பக் கல்வி
17) கட்டுமான தொழில்நுட்பக் கல்வி
18) மோட்டார் இயந்திரத் தொழிநுட்பக் கல்வி
19) மின் மற்றும் இலத்திரனியல் தொழிநுட்பக் கல்வி
20) ஜவுளி மற்றும் ஆடைத் தொழிநுட்பக் கல்வி
21) உலோக கட்டுமானத் தொழிநுட்பக் கல்வி
22) அலுமினிய கட்டுமானத் தொழிநுட்பக் கல்வி
23) கலை மற்றும் வடிவமைப்பு
24) சுற்றாடற் கல்வி
25) கணனி வன்பொருள் மற்றும் வலையமைப்பு
26) உற்பத்தி

5.7. <u>தரம் 12 ற்குரிய கால அட்டவணையைத் தயாரித்தல்</u>.

a. 2022 ஜனவரி மாதம் சில தொழில் பயிற்சி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படுவதுடன், அதற்கு முன்னர் **<u>பொதுப் பாடங்களுக்கு முன்னுரிமையளிப்பதுடன், தொழிற்பாடங்களை அறிமுகம் செய்யும் இதவடிவத்தின் முக்கிய பகுதிகளை கற்பித்திருக்கக்கூடியதாக</u>** மாணவர்களுடைய கற்றல் செயற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

b. 2022 ஜனவரி மாதத்திற்கு பின்னர் தொழில் பயிற்சியை ஆரம்பிக்கும் மாணவர்களுக்கு **தொழில்பயிற்சியை ஆரம்பிக்கும் வரையில் பொது இதவடிவம் மற்றும் தொழில் பாடங்களை அறிமுகப்படுத்தும் இதவடிவங்களில் நிறைவு செய்யமுடியாது மீதமாக இருக்கும் பகுதிகள் மற்றும் தொழில் பாடங்களுக்கான இடைநிலை இதவடிவங்களுக்குரிய** கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

c. பொதுப் பாடங்கள் மற்றும் தொழிற்பாடங்களை 2 வாரங்களுக்கு நடாத்துவதை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட மாதிரி கால அட்டவனை கீழே வழங்கப்பட்டுள்ளது. எனினும் மேலே a. மற்றும் b இன் கீழ் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைவாக **மாணவர்களது கற்றல் செயற்பாடுகளை மிகவும் வினைத்திறனாக மேற்கொள்ளக்கூடிய வகையில் பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு நெகிழ்வுத்தன்மை மிக்க கால அட்டவனை ஒன்றைத் தயாரித்துக்கொள்ள முடியும்.**

*பொது பாடங்களை கற்பிப்பதற்காக தயாரிக்கப்பட்ட மாதிரி கால அட்டவனை*

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| 7.45-8.25 | சிங்களம் | சிங்களம் | சிங்களம் | சிங்களம் | சிங்களம் |
| 8.25-9.10 | ஆங்கிலம் | ஆங்கிலம் | ஆங்கிலம் | ஆங்கிலம் | ஆங்கிலம் |
| 9.10-9.50 | தகவல் தொ. | தகவல் தொ. | தகவல் தொ. | தகவல் தொ. | ஆங்கிலம் |
| 9.50-10.30 | வாழ்க்கைத் தேர்ச்சிகள் | வாழ்க்கைத் தேர்ச்சிகள் | வாழ்க்கைத் தேர்ச்சிகள் | வாழ்க்கைத் தேர்ச்சிகள் | சுகாதாரம் |
| 10.30-10.45 | **இடைவேளை** | | | | |
| 10.45-11.25 | சுகாதாரம் | சுகாதாரம் | சுகாதாரம் | வாழ்க்கைத் தேர்ச்சிகள் | தகவல் தொ. |
| 11.25-12.10 | சுகாதாரம் | முயற்சி. திறன்கள் | முயற்சி. திறன்கள் | முயற்சி. திறன்கள் | தகவல் தொ. |
| 12.10-12.50 | அழகியல் | முயற்சி. திறன்கள் | விளையாட்டு | முயற்சி. திறன்கள் | அழகியல் |
| 12.50-1.30 | அழகியல் | தொழில் வழிகாட்டல் | விளையாட்டு | அழகியல் | அழகியல் |

*தொழிற் பாடங்களுக்காக தயாரிக்கப்பட்ட மாதிரி கால அட்டவனை*

(உள்ளக வடிவமைப்பு, தோட்டக்கலை தொழில்நுட்பக் கல்வி மற்றும் கட்டுமான தொழில்நுட்பக் கல்வி போன்ற பாடங்களை கற்கும் மாணவர் குழுக்காக கீழ்வரும் கால அட்டவனை தயாரிக்கப்பட்டுள்ளது. பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்படும் பாடங்களின் எண்ணிக்கை, மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் மாணவர்கள் தெரிவு செய்யும் பாடத் தொகுதிகளின் எண்ணிக்கைக்கேற்ப கால அட்டவனை தனித்துவமானதாக இருக்கும்)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| 7.45-8.25 | உள்ளக வடிவமைப்பு. | உள்ளக வடிவமைப்பு. | தரை அழகு வடிவமைப்பு | கட்டுமான தொ.நு | ஆங்கிலம் |
| 8.25-9.10 | உள்ளக வடிவமைப்பு | உள்ளக வடிவமைப்பு. | தரை அழகு வடிவமைப்பு | கட்டுமான தொ.நு | ஆங்கிலம் |
| 9.10-9.50 | உள்ளக வடிவமைப்பு. | உள்ளக வடிவமைப்பு. | தரை அழகு வடிவமைப்பு | கட்டுமான தொ.நு | தகவல் தொ.நு |
| 9.50-10.30 | உள்ளக வடிவமைப்பு. | உள்ளக வடிவமைப்பு. | தரை அழகு வடிவமைப்பு | கட்டுமான தொ.நு | தகவல் தொ.நு |
| 10.30-10.45 | **இடைவேளை** | | | | |
| 10.45-11.25 | தரை அழகு வடிவமைப்பு | கட்டுமான தொ.நு | தரை அழகு வடிவமைப்பு | கட்டுமான தொ.நு | உள்ளக வடிவமைப்பு. |
| 11.25-12.10 | தரை அழகு வடிவமைப்பு | கட்டுமான தொ.நு | தரை அழகு வடிவமைப்பு | கட்டுமான தொ.நு | உள்ளக வடிவமைப்பு |
| 12.10-12.50 | தரை அழகு வடிவமைப்பு | கட்டுமான தொ.நு | தரை அழகு வடிவமைப்பு | கட்டுமான தொ.நு | உள்ளக வடிவமைப்பு. |
| 12.50-1.30 | தரை அழகு வடிவமைப்பு | கட்டுமான தொ.நு | தரை அழகு வடிவமைப்பு | கட்டுமான தொ.நு | உள்ளக வடிவமைப்பு. |

d. தங்களது பாடசாலைக்கு **தொழிற்பாடத்துறையின் கீழ் நியமனம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களை இச் செயற்பாட்டில் உயர்ந்தளவில் ஈடுபடுத்தக்கூடியதாக மற்றும்,** பாடசாலையில் வேறு பாடங்களுக்காக நியமனம் பெற்று இப் பாடத்துறைக்குரிய பாடங்களை கற்பிக்கும் ஆசிரியர்களது கற்பிக்கும் பாடவேளை மற்றும் வெற்றிட பாடவேளை ஆகியனவற்றைக் கருத்திள்கொண்டு **தங்களது பாடசாலைக்கு மிகவும் பொருத்தமான முறையில் கால அட்டவனை ஒன்றைத் தயாரித்துக்கொள்வது** மிகவும் பொருத்தமாகும்.

5.8. <u>ஆசிரியர்களை உபயோகித்தல்.</u>

a. ஏற்கனவே பெரும்பாலான பாடசாலைகளுக்கு தொழிற்பாடத்துறைக்கான ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதுடன் புதிய நியமனம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் ஆசிரியர்களை வலுப்படுத்தும் செயற்றிட்டமொன்றின் கீழ் இப் பாடத்துறைக்கான ஆசிரியர்கள் தங்களது பாடசாலைக்கு நியமனம் செய்யப்படுவார்கள். இவ் **ஆசிரியர்களுக்கான தனிப்பட்ட கால அட்டவனை தயாரிக்கும் போது,** பொது மற்றும் தொழிற் பாடங்களை கற்பித்தல், களப் பயணம், இங்கு 5.9இல் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவன மேற்பார்வை போன்ற **தொழிற் பாடத்துறையுடன் தொடர்புடைய செயற்பாடுகளுக்கு முன்னுரிமை வழங்கக்கூடியதாக பாடவேளைகளை ஒதுக்கியதன் பின்னர்** ஏதேனும் ஒரு ஆசிரியருக்கு **மொத்த பாடவேளை எண்ணிக்கை (35) பூரணப்படுத்தப்படவில்லை எனின் மாத்திரம் பாடசாலையின் ஏனைய கற்பித்தல் செயற்பாடுகள் அல்லது வேறு ஏதேனும் செயற்பாடுகளுக்காக** பாடவேளைகளை ஒதுக்க முடியும். <u>**தொழிற் பாடத்துறைக்கு நியமனம் செய்யப்படும் ஆசிரியர் ஒருவர் தொழிற்பாடத்துறையில் அல்லாத பாடங்களை கற்பிப்பதற்காக முழுப் பாடவேளைகளையும் ஒதுக்கும் செயற்பாட்டை மேற்கொள்ளாதிருக்குமாறு வலியுறுத்தப்படுகின்றது.**</u>

b. பொது பாடங்கள் மற்றும் தொழில் பாடங்களது கற்பித்தல் செயற்பாடுகளுக்காக நியமனம் செய்யப்பட்டுள்ள **ஆசிரியர்கள் போதாதவிடத்து அவ்வாறான சந்தர்ப்பங்களில்** அல்லது ஏதேனும் ஒரு பாடத்துக்கு நிபுணத்துவம் பெற்ற **வேறு ஒரு ஆசிரியர் பாடசாலையில் இருப்பார் எனின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் அவ் ஆசிரியர்களையும்** தொழில் பாடத்துறைக்கான கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபடுத்த முடியும். மேலும் அத்தியாவசியமான சந்தர்ப்பங்களில் இதவடிவத்தில் **ஆசிரியர் ஒருவரால் கற்பிக்க முடியாத ஒரு பகுதியைக் கற்பிப்பதற்காக பொருத்தமான வளவாளர் ஒருவரின் ஒத்துழைப்பைப்** பெற்றுக்கொள்ளலாம்.

c. ஆசிரியரொருவர் தனது **நியமன பாடத்துக்கு மேலதிகமாக கற்பிக்கக்கூடிய பொது மற்றும் தொழிற்பாடங்கள்,** அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ள தொழிற் பாடத்திற்கமைய, கீழ்வரும் அட்டவனை 1 இல் தரப்பட்டுள்ளது. அதற்கு மேலதிகமாக அவ் ஆசிரியர்களது தகைமைகள் மற்றும் விருப்புக்கமைய வேறு ஒரு பொது/ தொழில் பாடமொன்றை கற்பிக்கும் செயற்பாட்டில் ஈடுபடச்செய்ய முடியும்.

d. கற்பிக்கும் சகல பாடங்களுக்குமுரிய ஆசிரியர்கள் தேசிய கல்வி நிறுவகத்தினூடாக பயிற்றுவிக்கப்படுவர்.

*அட்டவனை இல. 01: நியமனம் செய்யப்பட்ட தொழிற்பாடத்துக்கமைய ஆசிரியரொருவர் கற்பிக்கக்கூடிய பொது மற்றும் தொழிற் பாடங்கள்.*

| இல. | **நியமனம் செய்யப்பட்ட பாடம்** | **கற்பிக்கக்கூடிய வேறு பாடங்கள்** | |
|---|---|---|---|
| | | **தொழிற்பாடங்கள்** | **பொதுப் பாடங்கள்** |
| 1 | குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு | சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு | குடியுரிமைத் தேர்ச்சிகள், தொழில் வழிகாட்டல் |
| 2 | சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு | குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு | சமூக நலனுக்கான சுகாதாரமும் வாழ்க்கைத் தேர்ச்சிகளும், தொழில் வழிகாட்டல் |

| இல. | நியமனம் செய்யப்பட்ட பாடம் | கற்பிக்கக்கூடிய வேறு பாடங்கள் | |
|---|---|---|---|
| | | **தொழிற்பாடங்கள்** | **பொதுப் பாடங்கள்** |
| 3 | உடல் கல்வி மற்றும் விளையாட்டு | சுகாதாரம் மற்றும் சமூக பாதுகாப்பு | விளையாட்டு மற்றும் ஏனைய இணைப்பாடவிதான நிகழ்ச்சிகள், தொழில் வழிகாட்டல் |
| 4 | அரங்கற் கலை | கலை மற்றும் கைவினை, கலை மற்றும் வடிவமைப்பு | அழகியலை நயத்தல், தொழில் வழிகாட்டல் |
| 5 | நிகழ்ச்சி முகாமைத்துவம் | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | முயற்சியான்மைத் திறன்கள், தொழில் வழிகாட்டல் |
| 6 | கலை மற்றும் கைவினை | கலை மற்றும் வடிவமைப்பு | அழகியலை நயத்தல், தொழில் வழிகாட்டல் |
| 7 | உள்ளக வடிவமைப்பு | நவநாகரீக வடிவமைப்பு, கலை மற்றும் வடிவமைப்பு, கட்டுமான தொழில்நுட்பக் கல்வி | தொழில் வழிகாட்டல் |
| 8 | நவநாகரீக வடிவமைப்பு | உள்ளக வடிவமைப்பு, கலை மற்றும் வடிவமைப்பு | |
| 9 | வரையியல் வடிவமைப்பு | கணணி வன்பொருள் மற்றும் வலையமைப்பு | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப திறன்கள், தொழில் வழிகாட்டல் |
| 10 | கலை மற்றும் வடிவமைப்பு | உள்ளக வடிவமைபு, நவநாகரீக வடிவமைப்பு | அழகியலை நயத்தல், தொழில் வழிகாட்டல் |
| 11 | தரை அழகு வடிவமைப்பு | பிரயோக தோட்டக்கலைக் கற்கை, பெருந்தோட்ட பயிர்ச்செய்கை உற்பத்தித் தொழிநுட்பக் கல்வி | குடியுரிமைத் தேர்ச்சிகள் , தொழில் வழிகாட்டல் |
| 12 | பிரயோக தோட்டக்கலைக் கற்கை | தரை அழகு வடிவமைப்பு, பெருந்தோட்ட பயிர்ச்செய்கை உற்பத்தித் தொழிநுட்பக் கல்வி | |
| 13 | கால்நடை உற்பத்தி தொழிநுட்பக் கல்வி | உணவு உற்பத்தித் தொழிநுட்பக் கல்வி, நீர்வளத் தொழிநுட்பக் கல்வி | |
| 14 | உணவு உற்பத்தித் தொழிநுட்பக் கல்வி | கால்நடை உற்பத்தி தொழிநுட்பக் கல்வி, நீர்வளத் தொழிநுட்பக் கல்வி | |
| 15 | நீர்வளத் தொழிநுட்பக் கல்வி | கால்நடை உற்பத்தி தொழிநுட்பக் கல்வி, உணவு உற்பத்தித் தொழிநுட்பக் கல்வி | |
| 16 | பெருந்தோட்ட பயிர்ச்செய்கை உற்பத்தித் தொழிநுட்பக் கல்வி | தரை அழகு வடிவமைப்பு, பிரயோக தோட்டக்கலைக் கற்கை | |
| 17 | கட்டுமான தொழில்நநுட்பக் கல்வி | உள்ளக வடிவமைப்பு | தொழில் வழிகாட்டல் |

| இல. | நியமனம் செய்யப்பட்ட பாடம் | கற்பிக்கக்கூடிய வேறு பாடங்கள் | |
|---|---|---|---|
| | | **தொழிற்பாடங்கள்** | **பொதுப் பாடங்கள்** |
| 18 | மோட்டார் இயந்திரத் தொழிநுட்பக் கல்வி | மின் மற்றும் மின்னனுக் கல்வி | தொழில் வழிகாட்டல் |
| 19 | மின் மற்றும் இலத்திரனியல் தொழிநுட்பக் கல்வி | மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி | |
| 20 | ஜவுளி மற்றும் ஆடைத் தொழிநுட்பக் கல்வி | நாகரீக வடிவமைப்பு | |
| 21 | உலோக கட்டுமானத் தொழிநுட்பக் கல்வி | அலுமினிய கட்டுமானத் தொழிநுட்பக் கல்வி | |
| 22 | அலுமினிய கட்டுமானத் தொழிநுட்பக் கல்வி | உலோக கட்டுமானத் தொழிநுட்பக் கல்வி | |
| 23 | மென்பொருள் அபிவிருத்தி* | வரையியல் வடிவமைப்பு, கணணி வன்பொருள் மற்றும் வலையமைப்பு | தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப திறன்கள், தொழில் வழிகாட்டல் |
| 24 | இணையத்தள வடிவமைப்பு* | | |
| 25 | சுற்றுலா மற்றும் விருந்தோம்பல் | நிகழ்ச்சி முகாமைத்துவம் | முயற்சியான்மைத் திறன்கள், தொழில் வழிகாட்டல் |
| 26 | சுற்றாடல் கல்வி | தரை அழகு வடிவமைப்பு, பிரயோக தோட்டக்கலைக் கற்கை , பெருந்தோட்ட பயிர்ச்செய்கை உற்பத்தித் தொழிநுட்பக் கல்வி | குடியுரிமைத் தேர்ச்சிகள், தொழில் வழிகாட்டல் |

* பொதுப் பாடங்கள் தற்போது நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதால் அதற்காக நியமனம் பெற்ற ஆசிரியர்களை மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய பாடங்களை கற்பிக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுத்தலாம்.

5.9. <u>பாடங்களுக்கான இதவடிவங்களைப் பெற்றுக்கொள்ளல்</u>

பொது மற்றும் தொழிற் பாடங்களுக்குரிய கற்றல் இதவடிவங்களை தேசிய கல்வி நிறுவகத்தின் இணையத்தளத்திலிருந்து (https://nie.lk/) அல்லது தங்களது மாகாணக் கல்வித் திணைக்களத்தின் தொழிற்பாடத்துறைக்கான ஒருங்கிணைப்பாளராக செயற்படும் பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளரூடாக பெற்றுக் கொள்ளலாம்.

## B. தரம் 13

5.10. <u>மாணவர்களுக்கு NVQ 04 மட்ட பாடநெறிகளை நடாத்துதல்.</u>

a. NVQ 04 பாடநெறிகளை நடாத்தும் மற்றும் தொழிற் பாடத்துறை **<u>மாணவர்களை பயிற்றுவிப்பதற்காக கல்வி அமைச்சுடன் தொடர்புபட்டுள்ள</u>** தொழில் பயிற்சி நிறுவனங்களில் **தரம் 13 இல் இணைந்து உரிய பாடநெறிகளைத் தொடர வேண்டும்.**

b. இத் **தொழில் பயிற்சி நிறுவனங்கள்,** பாடநெறிகளுக்கமைய, **இணைப்பு 03 ல்** வழங்கப்பட்டுள்ளன. மாணவர் தெரிவுசெய்த NVQ 04 பாடநெறி தொடர்பாக கல்வி அமைச்சை அறிவுறுத்தியதன் பின்னர் **பயிற்சிக்காக இணைப்புச் செய்வது தொடர்பான ஆலோசனைகள் கல்வி அமைச்சினால் உரிய பாடசாலைக்கு** வழங்கப்படும்.

c. **தொழில் பயிற்சியை ஆரம்பிக்க ஒரு மாதத்திற்கு முன்னர் உரிய நிலையத்தில் மாணவர்களது <u>ஆரம்ப பதிவினை மேற்கொள்ளல்</u>** மற்றும் தொழிற்பயிற்சி நிலையம், வதிவிட பயிற்சி எனின் விடுதிகள், உட்பட மாணவர்களது பயிற்சியுடன் தொடர்புடைய உரிய இடங்களுக்கு சென்று அது தொடர்பான **விபரங்களை மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோருக்கு வழங்குவது <u>தொழிற்பாடங்களுக்கு பொறுப்பான ஆசிரியரின் பொறுப்பாகும்</u>**. இதற்காக **நிறுவனங்களுடன் தொடர்புகொள்வதற்குத் தேவையான ஒருங்கிணைப்புசார் விபரங்கள்** இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. (இணைப்பு 04)

d. தொழில்பயிற்சி நிலையங்களுக்கு மாணவர்களை இணைப்புச் செய்யும் போதும் மாணவர்கள் தொடர்ச்சியாக பாடநெறியில் கலந்துகொள்கின்றனரா என உறுதிப்படுத்திக்கொள்வதும் அதனை தொடர்ச்சியாக மேற்பார்வை செய்வதும் ஆசிரியரால் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

e. தொழில் பயிற்சியில் ஈடுபடும் காலத்தில் மாணவர்களது வருகையை அடிப்படையாகக் கொண்டு நாளாந்த கொடுப்பனவொன்று வழங்கப்படும் என்பதுடன் இது தொடர்பான விபரங்கள் பின்னர் பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படும்.

f. மாணவர்களது பயிற்சி செயற்பாடுகளை ஆசிரியர்களூடாக மேற்பார்வை செய்தல் தொடர்பான விபரங்கள் பயிற்சிக்கு இணைப்புச் செய்வதற்குரிய் ஆலோசனைகளுடன் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படும். மேலும் மேற்பார்வைப் பயணங்களுக்காக ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்கும் செயன்முறை இல. 26/2020 உடைய பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட நிதி வழங்கள் தொடர்பான சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் அச் சுற்றுநிருபம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 05)

**g. மிக முக்கியம்:**

❖ மாணவர்களுக்கான தொழிற்பயிற்சியை ஆரம்பிப்பதில் ஏற்படக்கூடிய தாமதமானது, பொருளாதார பிரச்சனைகளைக் கொண்ட மாணவர் குழுக்கள் உட்பட **விரைவில் தொழில் பெறுவதற்கு எதிர்பார்த்திருக்கும் மாணவர்களுக்கு** தடையாகும் என்பதாலும் மாணவர்கள் இடைவிலகுவதற்கு காரணமாக அமைவதாலும், 2021ல் அனுமதிக்கப்பட்ட மாணவர்கள், **2022 ஜனவரி மாதம் முதல் NVQ 04 பாடநெறியைத் தொடர்வதற்காக நிறுவனங்களுக்கு இணைப்புச் செய்யப்பட சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.** எனினும் மாணவர் அனுமதி மற்றும் மாணவர்களுக்கு தொழிற் துறைகள் மீதுள்ள விருப்பை இனங்கண்டுகொள்வதற்கான **<u>காலம் போதாது எனக் கருதின்</u>** இணைப்பு 04ல் குறிப்பிடப்பட்டுள்ள **ஒரு வருடகால பாடநெறிகளுக்காக 2022 ஜூலை மாதம்** மற்றும் **ஒரு வருடத்துக்கு மேற்பட்ட பாடநெறிகளுக்காக 2022 ஜூலை மாதம் முதல் 2023 ஜனவரி மாதம் வரையில்** மாணவர்களை நிறுவனங்களுக்கு இணைப்புச்செய்யலாம்.

6. <u>பாடசாலைகளை பலப்படுத்துவதற்காக பாடசாலைகளுக்கு வழங்கப்படும் பாடசாலையை அடிப்படையாகக் கொண்டு நிதி வழங்கள்</u>.

தொழிற்பாடத்துறைக்குரிய களப்பயணங்களை மேற்கொள்ளல், ஆலோசனை மற்றும் வளவாளர்களை பெற்றுக்கொள்ளல், கற்றல் உதவி உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளல், நிறுவன மேற்பார்வை போன்ற செயற்பாடுகளுக்காக ஆசிரியர்களுக்கு கொடுப்பனவுகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளுக்காக பாடசாலைகளை **வலுப்படுத்துவதற்காக பாடசாலையை அடிப்படையாகக் கொண்ட நிதி பாடசாலைக்கு வழங்கப்படும் என்பதுடன் இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள 26/2020 சுற்றுநிருபம்** இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. **(இணைப்பு 05)**

7. <u>தகவல் பரிமாற்றம்</u>

a. கல்வி அமைச்சினால் பல்வேறு தருணங்களில் பாடசாலைகளுக்கு மிக **முக்கியமான தகவல்கள் உட்பட முக்கியமான விபரங்கள்** அனுப்பப்படுவதால் **பாடசாலை, அதிபர் மற்றும் தொழிற் பாடத்துறை ஒருங்கிணைப்பாளர் ஆகியோரை எந்நேரமும் தொடர்புகொள்ளக்கூடிய வகையிலான விபரங்களை இணைப்பு 06 இல் உள்ள மாதிரிக்கமைய** பூரணப்படுத்தி, அதன் **மென் பிரதியை** (அதிபரின் கையொப்பத்துடன் கூடிய வருடியூடாக (scan) எடுக்கப்பட்ட பிரதி அல்லது புகைப்படமொன்றை) **vs.vocationaltraining.moe@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு <u>உடனடியாக</u>** அனுப்பிவைக்கவேண்டும் என்பதுடன் அதன் வன் பிரதியை பீ.பீ விதானகே, கல்விப் பணிப்பாளர் (அனைவருக்கும் கல்வி), கல்வி அமைச்சு, இசுருபாய பத்தரமுல்லை எனும் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

b. இப் பாடத்துறை நடைமுறைப்படுத்தப்படும் சகல பாடசாலைகளிலும் **2021 ம் ஆண்டு தரம் 12இல் அனுமதிக்கப்பட்ட மாணவர்களது விபரங்களின் சாராம்சம் இணைப்பு 07இல் உள்ள மாதிரிக்கமைய பூரணப்படுத்தப்பட்டு** மேலே a. இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முறைக்கமைய கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

c. மேற்படி அடிப்படை விபரங்களுக்கு மேலதிகமாக, விசேட சந்தர்ப்பங்கள் தவிர்த்து, **ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் தரவுகளை சேகரிப்பதற்காக <u>நிகழ்நிலை (online) முறையே உபயோகிக்கப்படும்.</u>** இதன்போது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் **<u>மிக விரைவில்</u>** சேகரிக்கப்படும்.

| விபரம் | விபரங்கள் சேகரிக்கப்படும் முறை | பிரவேசம் வழங்கப்படல்* |
|---|---|---|
| i. **<u>மாணவர்களது விபரங்கள்</u>** | பாடசாலைக்கு, அதிபருக்கு மற்றும் ஒருங்கிணைப்பாளருக்கு பிரவேசம் வழங்கப்படும் spread sheet மாதிரியூடாக | 2021 நவம்பர் மாதம் 11 திகதி வரை |
| ii. **<u>மாணவர்கள் தெரிவு செய்த தொழில் பயிற்சி பாடநெறி</u>** | மேற்படி spread sheet மாதிரியிலேயே உள்ளீடு செய்யப்படும் பக்கத்தினூடாக | 2021 நவம்பர் மாதம் 23 திகதி வரை |
| iii. தொழில் பயிற்சிக்காக மாணவர்களது தற்காலிக பதிவுகள் மேற்கொள்ளப்-பட்ட நிலையம் | மேற்படி spread sheet மாதிரியிலேயே உள்ளீடு செய்யப்படும் பக்கத்தினூடாக | 2021 டிசம்பர் மாதம் 10 திகதி வரை |

*** 2022 ஜனவரி மாதம் பயிற்சிக்காக நிறுவனங்களுக்கு மாணவர்களை இணைப்புச் செய்வதற்குரிய திகதிகள் வழங்கப்பட்டுள்ளன என்பதுடன், 2022 ஜூலை மாதத்திலிருந்து பயிற்சிக்காக மாணவர்களை இணைப்புச் செய்வதற்குரிய திகதிகள் முறையே <u>2022 மார்ச் 25, 2022 ஏப்ரல் 28 மற்றும் 2022 மே 13ம்</u> திகதி** என்றவாறு திருத்தப்படல் வேண்டும்.

d. நிகழ்நிலையூடாக தகவல்களை சேகரிக்கும் சந்தர்ப்பங்களில், விசேடமாக குறிப்பிடப்பட்ட சந்தர்ப்பங்கள் தவிர்த்து, ஏனைய எந்தவொரு சந்தர்ப்பத்திலும் **Excel அல்லது வேறொரு முறையூடாக தகவல்கள் அனுப்பிவைக்கப்படலாகாது என்பதுடன் spread sheet மாதிரியில் மட்டுமே பதிவேற்றப்படுவதை உறுதிசெய்தல் வேண்டும்.**

e. நிகழ்நிலை முறை மற்றும் ஏனைய முறைகளூடாக பெற்றுக்கொள்ளப்படும் **தகவல்கள் நிதி ஒதுக்கீடு உட்பட ஏனைய முக்கியமான செயற்பாடுகளுக்காக உபயோக்கப்படுவதால் அவற்றின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்திக்கொண்டதன் பின்னர் அவற்றை பதிவிடுதல் கட்டாயமாகும்.**

f. பதிவேற்றப்படும் சகல **தகவல்களதும் உண்மைத் தன்மை தொடர்பாக அதிபர் பொறுப்புக்கூற வேண்டும்.**

8. உயர் தர தொழிற்பாடத்துறையை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துதல் தொடர்பாக **விபரங்களுடன் கூடிய ஆலோசனை சஞ்சிகை** ஒன்று எதிர்வரும் காலங்களில் தங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

9. தொழிற்பாடத்துறையின் செயற்பாடுகளுக்காக அனைவருக்கும் கல்விக் கிளையுடன் **தொடர்புகொள்ளக் கூடிய விபரங்கள்** கீழே வழங்கப்பட்டுள்ளன. கையடக்கத் தொலைபேசி இலக்கங்களை பாடசாலை செயற்பாடுகளுக்காக மாத்திரம் உபயோகிக்குமாறும் மாணவர்கள், பெற்றோர் போன்ற தரப்பினருடன் அமைச்சு பாடசாலையூடாக தொடர்புகொள்ளும் என்பதுடன் **அத் தரப்பினருக்கு நிலையான தொலைபேசி இலக்கங்களை மாத்திரம் வழங்குமாறும்** தயவுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

| | |
|---|---|
| அனைவருக்கும் கல்விக் கிளை | 011 278 7136, 011 278 6746, 011 278 5141/50 - நீட்டிப்பு- 1330<br>தொலை நகல்: 011 278 7136 |
| **உத்தியோகத்தர்** | **தொடர்புகொள்வதற்கான விபரங்கள்** |
| • திருமதி பத்ரா பீ. விதானகே, கல்விப் பணிப்பாளர்/ அனைவருக்கும் கல்வி | badra.withanage@moe.gov.lk |
| • செல்வி ஹிமாலி வீரரத்ன, பிரதிக் கல்விப் பணிப்பாளர்/ அ.க | himaliwee@gmail.com<br>011 278 6746, 071 800 8365 |
| • செல்வி சாதிகா வசீர், உதவிக் கல்விப் பணிப்பாளர்/ அ.க | shadikarwazir@gmail.com<br>011 278 7136, 071 734 7278 |
| • திருமதி லக்தினீ லியனகே, உதவிக் கல்விப் பணிப்பாளர்/ அ.க | lakdini.moe@gmail.com |

**ஒவ்வொரு செயற்பாடுகளுக்கும் பொறுப்பான உத்தியோகத்தர்கள்**

| **உத்தியோகத்தர்** | **செயற்பாடு** | **தொடர்புகொள்வதற்கான விபரங்கள்** |
|---|---|---|
| திருமதி வாசனா முதுமாலி, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்/ அ.க | அனைவருக்கும் கல்விக் கிளையின் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 011 278 7136,<br>011 278 6746 |
| திருமதி டீ.பீ சந்திமா மல்காந்தி, அபிவிருத்தி உத்தியோகத்தர்/ அ.க | **உபகரணங்கள், வலையமைப்பு மற்றும் இணையச் சேவைகள்,** பாடசாலை ஒருங்கிணைப்பு – **வடமேல்** மாகாணம் | 011 278 6746 |

| உத்தியோகத்தர் | செயற்பாடு | தொடர்பு கொள்வதற்கான விபரங்கள் |
|---|---|---|
| திருமதி எச்.டீ உமேசா இரங்கி அபிவிருத்தி உத்தியோகத்தர்/ அ.க | **பாடசாலை மைய நிதி வழங்கள்** மற்றும் அத்துடன் தொடர்பான செலவினங்கள் | 011 278 6746, umeshamoe@gmail.com |
| திருமதி கே. கே. டீ. பீ கல்பணீ அபிவிருத்தி உத்தியோகத்தர்/ அ.க | **ஆசிரியர் கொள்ளளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டம்** | 011 278 6746 |
| திருமதி பீ.எம் தனுஷிகா பிரியங்கனீ, அபிவிருத்தி உத்தியோகத்தர்/ அ.க | **மாணவர் NVQ மதிப்பீடு** | 011 278 6746 vs.assessments.moe @ gmail.com |
| திரு டப்.யூ.பீ குமார, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்/ அ.க | **கட்டடங்கள் நிர்மாணம், திருத்தங்கள் மற்றும் ஆசிரியர் பயிற்சி** பாடசாலை ஒருங்கிணைப்பு – **மேல் மாகாணம்** | 011 278 7136, 070 561 6162, upulkumara.moe @gmail.com |
| திருமதி எம்.கே நிஸன்சலா விஜேரத்ன, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்/ அ.க | **மாணவர்களை நிறுவனமயப்படுத்தல் – பாடசாலை ஒருங்கிணைப்பு** | 011 278 7136 vs.vocationaltraining.moe@gmail.com |
| செல்வி டீ. எச் ஷாக்யா சிதுமினி, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்/ அ.க | **மாணவர்களை நிறுவனமயப்படுத்தல் – நிறுவன ஒருங்கிணைப்பு** | |
| திருமதி எம்.ஏ.எப் நஸீபா, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்/ அ.க | பாடசாலை ஒருங்கிணைப்பாளர் – **வடக்கு** மாகாணம் **தமிழ் மொழிமூலம்** தகவல்களைப் பெற்றுக் கொள்ள | 011 278 7136 naseefa9706@gmail.com |
| திரு எம்.யூ,சீ மான்னப்பெரும, முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்/ அ.க | பாடசாலை ஒருங்கிணைப்பாளர் – **கிழக்கு, வடமத்திய மற்றும் சபரகமுவ** மாகாணம் | 011 278 7136 |
| திருமதி துலாணி அலுத்கமகே, ஆவண உதவியாளர்/ அ.க | பாடசாலை ஒருங்கிணைப்பாளர் – **தென் மற்றும் ஊவா** மாகாணம் | 011 278 7136 |
| திருமதி ஜீ.என்.யூ.அய் ஜயவர்தன, ஆவண உதவியாளர்/ அ.க | பாடசாலை ஒருங்கிணைப்பு – **மத்திய** மாகாணம் **ஆசிரியர் இடமாற்றங்களை பரிந்துரைத்தல்** (ஆசிரியர் இடமாற்றம் தொடர்பான சகல செயற்பாடுகளுக்கும் கல்வி அமைச்சின் ஆசிரியர் தாபனக் கிளையைத் தொடர்பு கொள்ளவும்) | 011 278 6746 011 278 4819 (ஆசிரியர் தாபனக் கிளை) |
| திருமதி வத்சலா திலினி, தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர்/ அ.க | மாணவர்களுக்கான கொடுப்பனவு | 011 278 7136 13yearsallowances @ gmail.com |

10. இக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்பாடுகளை முறையாக நிறைவு செய்து, உயர் தர தொழிற்பாடத்துறை மற்றும் அத்துறையில் அனுமதிக்கப்படும் மாணவர்களது நோக்கங்களை நிறைவேற்றுவதை இலக்காகக் கொண்டு, தங்களது பாடசாலையில் இச் செயற்பாடுகளை முறையாக திட்டமிட்டு செயற்படுத்துமாறு தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பீ. பீ விதானகே
கல்விப் பணிப்பாளர் (அனைவருக்கும் கல்வி)
கல்வி அமைச்சு

<u>பிரதிகள்</u>

1. அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள் – உரிய நடவடிக்கைக்கு
2. அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள் – உரிய நடவடிக்கைக்கு
3. அனைத்து மாகாண ஒருங்கிணைப்பாளர்கள் (தொழிற்பாடத்துறை) – உரிய நடவடிக்கைக்கு
4. அனைத்து வலய ஒருங்கிணைப்பாளர்கள் (தொழிற்பாடத்துறை) – உரிய நடவடிக்கைக்கு

**උසස් පෙළ වෘත්තීය විෂය ධාරාව**

**(දහතුන් වසරක සහතික කරන ලද අධ්‍යාපන වැඩසටහන)ට ඇතුළත් වීම සඳහා**

**<u>අයදුම් පත්‍රය</u>**

(01) ශිෂ්‍යයාගේ / ශිෂ්‍යාවගේ සම්පූර්ණ නම : ................................................................................................

................................................................................................................................................

(02) මුලකුරු සමග නම : ................................................................................................

(03) ස්ථිර ලිපිනය : ................................................................................................

(04) ස්ත්‍රී / පුරුෂ භාවය : ..........................................

(05) ඉගෙනුම් මාධ්‍යය : ..........................................

(06) උපන් දිනය: ..........................................

(07) 2021 ජනවාරි 31 දිනට වයස: අවුරුදු ......................... මාස......................... දින.........................

(08) අ.පො.ස. (සා.පෙළ) ඉගෙනුම ලැබූ පාසලේ ලිපිනය : ................................................................................................

................................................................................................................................................

ඇතුළත් වීමේ අංකය : ..........................................

(09) එම පාසල පිහිටි දිස්ත්‍රික්කය : ..........................................

(10) විෂය සමගාමී ජයග්‍රහණ : ................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

................................................................................................................................................

(11) මව / පියා /භාරකරුගේ නම සහ ලිපිනය: ................................................................................................

................................................................................................................................................

(12) අ.පො.ස. (සා.පෙළ) විභාග ප්‍රතිඵල:

වර්ෂය : ..........................................

විභාග අංකය : ..........................................

| විෂය | ශ්‍රේණිය (සංකේත)* | පාසල් පදනම් කරගත් ඇගයීම් නිපුණතා මට්ටම (සංකේත)** |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |
| 9. | | |

*(ශ්‍රේණි සංකේත : A - විශිෂ්ඨ, B - අධි සම්මාන, C - සම්මාන, S - සාමාන්‍ය, W - දුර්වල සාමාර්ථ)

**(පාසල් පදනම් කරගත් ඇගයීම් නිපුණතා මට්ටම - සංකේත 1 - විශිෂ්ඨ මට්ටම, 2 - ඉහළ මට්ටම, 3 - සම්මාන මට්ටම, 4 - ආසන්න මට්ටම, 5 - නිපුණතා මට්ටමට ළඟා නොවීම)

(13) උසස් පෙළ වෘත්තීය විෂය ධාරාව ඉගෙනීමට අදහස් කරන මාධ්‍යය: (සිංහල/ දෙමළ)

(14) උසස් පෙළ වෘත්තීය විෂය ධාරාව ඉගෙනීමට අදහස් කරන වෘත්තීය විෂයයන් (මීට අදාළ දැන්වීමෙහි දක්වා ඇති වෘත්තීය විෂයයන් 26න් 3ක් තෝරාගත යුතුය.)

i. ..........................................................................................................................

ii. ..........................................................................................................................

iii. ..........................................................................................................................

(15) දැනට ශිෂ්‍යයා / ශිෂ්‍යාව ඉගෙනුම ලබන විදුහලේ විදුහල්පතිගේ සහතිකය

ඉහත නම සදහන් ශිෂ්‍යයා / ශිෂ්‍යාව මේ විදුහලේ .............................. වැනි ශ්‍රේණියේ ඉගෙනීම ලබන/ ලැබූ බව මෙයින් සහතික කරමි. දැනට මේ විදුහලේ ............................... වැනි ශ්‍රේණියේ සිට ............................... ශ්‍රේණිය දක්වා ඉගැන්වීම් කෙරෙන බවත්, උසස් පෙළ වෘත්තීය විෂය ධාරාව ක්‍රියාත්මක කරනු ලබන / නොලබන බවත් කාරුණිකව දන්වමි. (උසස් පෙළ වෘත්තීය විෂය ධාරාව ක්‍රියාත්මක කෙරෙන්නේ නම් ඉගැන්වෙන විෂයයන් මෙහි දක්වන්න)

ඉගැන්වෙන විෂයයන්:

| | |
|---|---|
| 1. | 7. |
| 2. | 8. |
| 3. | 9. |
| 4. | 10. |
| 5. | 11. |
| 6. | 12. |

(16) සටහන් : ..........................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

..........................................................................................................................................................

.

......................................................... ..........................................................

දිනය විදුහල්පතිගේ අත්සන හා නිල මුද්‍රාව

(17) ඉහත සදහන් කරුණු සත්‍ය බවත්, නිවැරදි බවත් මෙයින් සහතික වෙමු.

......................................................... ..........................................................

ශිෂ්‍යයා/ ශිෂ්‍යාවගේ අත්සන පියාගේ/මවගේ/භාරකරුගේ අත්සන

**உயர் தரத்தின் தொழில்துறைப் பாடத்துறை (பதின்மூன்று வருட உத்தரவாதப்படுத்தப்பட்ட கல்வி நிகழ்ச்சித்திட்டம்)க்கு உட்சேர்த்துக் கொள்வதற்கான**

**விண்ணப்பப் படிவம்**

(01) மாணவரின்/ மாணவியின் முழுப் பெயர் :……………………………………………………………………...

……………………………………………………………………………………………………………………

(02) முதலெழுத்துக்களுடன் பெயர் : ………………………………………………………………………...........

(03) நிரந்தர முகவரி : ………………………………………………………………………………………………..

……………………………………………………………………………………………………………………

(04) பால் : ……………………………………………………………………………………………………………

(05) கற்கும் மொழி மூலம் : ……………………………………………………………………………………….

(06) பிறந்த திகதி : ………………………………………………………………………………………………..

(07) 2021 ஜனவரி 31ம் திகதியன்று வயது : வருடம்…………… மாதம்…………… நாட்கள்…………

(08) க.பொ.த. (சா.த) இல் கல்வி கற்ற பாடசாலையின் முகவரி : ………………….………………….………..

……………………………………………………………………………………………………………………

அனுமதி இலக்கம் : ……………………………………………………………………………………………

(09) அப் பாடசாலை அமைந்துள்ள மாவட்டம் : ……………………………………………………..

(10) இணைப் பாடவிதான வெற்றிகள் : …………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………………………

(11) தாய்/ தந்தை/ பாதுகாவலரின் பெயர் மற்றும் முகவரி : …………………………………………………..

……………………………………………………………………………………………………………………

(12) க.பொ.த. (சா.த) பரீட்சைப் பெறுபேறுகள்

வருடம் : ………………………………………….

பரீட்சைச் சுட்டெண் : …………………………….

| பாடம் | சித்தி (குறியீடு)* | பாடசாலை மட்ட மதிப்பீட்டின் தேர்ச்சி மட்டம் (குறியீடு)** |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

*(சித்தி குறியீடு : A – விசேட, B – அதியுயர், C – திறமை, S – சாதாரணம், W – பலவீனம்)

**(பாடசாலை மட்ட மதிப்பீட்டின் தேர்ச்சி மட்டம் (குறியீடு) : 1 – விசேட மட்டம், 2 – உயர் மட்டம், 3 – சித்தி மட்டம், 4 – சாதாரண மட்டம், 5 – தேர்ச்சி மட்டத்தை அடையவில்லை)

(13) உயர்தர தொழில்துறைப் பாடத்துறையை கற்பதற்கு எதிர்பார்க்கும் மொழிமூலம் : (சிங்களம்/ தமிழ்)

(14) உயர்தர தொழில்துறைப் பாடத்துறையில் கற்க எதிர்பார்க்கும் தொழில்துறைப் பாடங்கள் (இதற்குரிய அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தொழில்துறைப் பாடங்கள் 26 இல் 3 இனைத் தெரிவு செய்தல் வேண்டும்.)

i. ………………………………………………………………

ii. ………………………………………………………………

iii. ………………………………………………………………

(15) தற்போது மாணவன்/ மாணவி கற்கும் பாடசாலை அதிபரின் உறுதிப்படுத்தல்

மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மாணவன்/ மாணவி இப் பாடசாலையில் …………. ஆம் தரத்தில் கல்வி கற்கின்றார்/ கற்றவர் என்பதை இத்தால் உறுதிப்படுத்துகிறேன். தற்போது இப் பாடசாலையில் ……………… ஆம் தரத்திலிருந்து …………… ஆம் தரம் வரை கல்வி கற்பிக்கப்படுகின்றது என்பதனையும், தரங்கள் 12 மற்றும் 13 இல் தொழில்துறைப் பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன/ கற்பிக்கப்படவில்லை என்பதனையும் தயவோடு அறியத் தருகிறேன். (உயர்தர தொழில்துறை பாடத்துறை செயற்படுத்தப்படுகின்றதெனின், கற்பிக்கப்படும் பாடங்களை இங்கே குறிப்பிடவும்.)

கற்பிக்கப்படும் பாடங்கள்:

| | |
|---|---|
| 1. | 7. |
| 2. | 8. |
| 3. | 9. |
| 4. | 10. |
| 5. | 11. |
| 6. | 12. |

(16) குறிப்பு :

……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………


திகதி : …………………………………..                …………………………………
அதிபரின் கையொப்பமும் முத்திரையும்

(17) மேற்குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றோம்.

………………………………………                …………………………………

மாணவன்/ மாணவியின் கையொப்பம்                தந்தை/தாய்/பாதுகாவலரின் கையொப்பம்

# LAYOUT - SMART CLASS ROOM




PLAN

1:50

NOTE:

- LED lights to be provided
- It is preferred if the class room is selected avoiding roof level floors, if it is unavoidable ceiling is required.

| FINISHES SCHEDULE | |
|---|---|
| FLOOR | 600mm x 600mm Homogenous floor tiles (samples to be approved) |
| INTERNAL WALLS | Smooth plastered and painted |
| CEILING | 600mm x 600mm suspended metal ceiling |
| SOFFIT | Smooth plastered and painted |

NEAREST SCHOOL IS THE BEST SCHOOL
PROJECT MANAGEMENT UNIT

MINISTRY OF EDUCATION

PROJECT NO: 2017/NSBS/051

PROJECT TITLE: SMART CLASS ROOM (Convertion of Existing Class Room)

DRAWING TITLE: LAYOUT

PROJECT ARCHITECT: Maduwanthi Sirisena

DRAWN BY: Maduwanthi Sirisena

DRAWING NO: 2017/NSBS/TP/11

| SCALE: | DATE: | SHEET NO: |
|---|---|---|
| 1:50 | 13/05/ 2017 | 01 |

CHIEF ARCHITECT:

PROJECT DIRECTOR:

# AL VOCATIONAL STREAM
## COURSES, RELEVANT SUBJECTS, INSTITUTES AND COMMENTS - 2022

| SHORT FORMS USED | |
|---|---|
| Vocational Training Authority | **VTA** |
| Department of Technical Education and Training | **DTET** |
| National Apprenticeship and Industrial Training Authority | **NAITA** |
| Ocean University of Sri Lanka | **OU** |
| National Youth Service Council | **NYSC** |
| Center for Housing Planning and Building, Construction Industry Development Au | **CHPB** |
| Construction Equipment Training Center | **CETRAC** |
| Operation Training Center | **CETRAC - OTC** |
| Gem and Jewellary Research and Training Institute | **GJRTI** |
| National Institute of Sports Science | **NISS** |
| Uva Province Institute of Sports Science | **Uva ISS** |
| Folk Arts Center | **FAC** |
| Department of Agriculture | **Dept. of Agri** |
| Eastern Province Department of Agriculture | **East Agri Dept.** |
| Sri Lanka Institute of Tourism and Hotel Management | **SLITHM** |
| National Institute of Plantation Management | **NIPM** |

| | Course | Relevant Vocational Subject/s | Institutes | Course Duration (In house training + On the Job Training) | Comment on Job Demand | Other Comments |
|---|---|---|---|---|---|---|
| 1 | Agricultural Machinery and Equipment Mechanic | Automobile Studies | VTA, DTET, NYSC, NAITA | 18 - 30 months | | Training could be residential |
| 2 | Agriculture Field Assistant | Applied Horticultural Studies, Livestock Product Studies | DTET, NYSC, Agri Dept, East Agri Dept | 12 - 18 months | | Early morning field work should be expected. Training could be residential |

| | Course | Relevant Vocational Subject/s | Institutes | Course Duration (In house training + On the Job Training) | Comment on Job Demand | Other Comments |
|---|---|---|---|---|---|---|
| 3 | Aluminum Fabrication with Interior Decorator | Aluminum Fabrication Studies, Metal Fabrication Studies | VTA, DTET | 18 months | High | |
| 4 | Aluminum Fabricator | Aluminum Fabrication Studies, Metal Fabrication Studies, Manufacturing | VTA, DTET, NAITA | 12 - 15 months | High | NVQ Exam also includes a WRITTEN test. Higher order thinking skills required. |
| 5 | Apparel Design Technician | Textile and Apparel Studies, Manufacturing | VTA, NAITA | 18 months | | |
| 6 | Aqua Culture Technician | Aquatic Resource Studies | OU | 12 months | | |
| 7 | Art and Sculpture | Arts and Crafts | FAC | 18 months | Extremely Limited | Training opportunities are extremely limited |
| 8 | Automobile A/C Technician | Automobile Studies | VTA, DTET, NAITA | 18 months | | |
| 9 | Automobile Electrician | Automobile Studies, Electrical and | VTA, DTET, NYSC, | 18 - 24 months | | |
| 10 | Automobile Mechanic | Automobile Studies | VTA, DTET, NAITA, Ashok Leyland, NYSC | 24 - 30 months | | NVQ Exam also includes a WRITTEN test. Higher order thinking skills required. |
| 11 | Automobile Painter | Automobile Studies | VTA, DTET, NAITA | 12-18 months | High | |
| 12 | Automobile Technican | Automobile Studies | VTA | 24 months | | |
| 13 | Automobile Techno Commercial Sales Assistant | Automobile Studies | Ashok Leyland | 12 months | | |
| 14 | Automobile Tinker | Automobile Studies | VTA, NAITA | 12-18 months | High | |
| 15 | Baker/ Pastry & Bakery | Food Processing Studies, Manufacturing | VTA, NYSC, NAITA | 12 months | | NVQ Exam also includes a WRITTEN test. |
| 16 | Beautician | Event Management | VTA, NYSC, NAITA | 18 months | | Training opportunities are extremely limited. NVQ Exam also includes a WRITTEN test. Higher order thinking skills required. |
| 17 | Care Giver (Elder) | Health & Social Care | VTA, NAITA | 12 months | High | |
| 18 | Child Care Giver | Child Psychology and Care | VTA, NAITA | 12 months | | |
| 19 | Computer Hardware Technician/ Computer Hardware Technician with CISCO IT Essential | Computer Hardware & Networking | VTA, DTET, NYSC, NAITA | 12-18 months | High | |

| | Course | Relevant Vocational Subject/s | Institutes | Course Duration (In house training + On the Job Training) | Comment on Job Demand | Other Comments |
|---|---|---|---|---|---|---|
| 20 | Computer Network Technician/ Computer Hardware and Network Technicain with CISCO IT Essential | Computer Hardware & Networking | VTA, NYSC | 12-18 months | | |
| 21 | Construction Craftsman (Masonry) | Construction Studies | VTA, DTET, NAITA | 18 months | High | |
| 22 | Construction Equipment Mechanic | Construction Studies | CETRAC - OTC, NAITA | 12 - 30 months | | Training opportunities are extremely limited |
| 23 | Construction Equipment Operator | Construction Studies | CETRAC - OTC, VTA | 12 months | | Training opportunities are extremely limited |
| 24 | Construction Site Supervisor | Construction Studies | VTA, DTET, NYSC, CHPB | 12-18 months | | NVQ Exam also includes a WRITTEN test. Higher order thinking skills required. Student should have a basic knowledge in the construction sector to succeed in this course. Training opportunities extremely limited. |
| 25 | Cook | Tourism and Hospitality Management | VTA, DTET, NYSC, SLITHM, NAITA | 12 - 18 months | | NVQ Exam also includes a WRITTEN test. |
| 26 | Dancing | Performing Arts | NYSC, FAC | 18 months | Extremely Limited | Practical selection test will be conducted. Training opportunities are extremely limited. Training IS residential |
| 27 | Draughtsperson/ Draughtmanship | Construction Studies | VTA, DTET, NYSC | 18 months | | NVQ Exam also includes a WRITTEN test. Higher order thinking skills required. |
| 28 | Dress Maker | Textile and Apparel Studies, Fashion Designing, Manufacturing | VTA | 12 months | | |
| 29 | Electric Motor Winder | Electrical and Electronic Studies | VTA, NAITA | 18 months | | |
| 30 | Electrical Appliance Maintenance Technician | Electrical and Electronic Studies | VTA, NAITA | 18 months | | Training opportunities are extremely limited. |
| 31 | Electrician (Industrial) | Electrical and Electronic Studies | VTA, DTET | 18 - 24 months | | NVQ Exam also includes a WRITTEN test. Higher order thinking skills required. |
| 32 | Electronic Appliances Technician/ Radio, TV and Allied Equipment Repairer | Electrical and Electronic Studies, Manufacturing | VTA, DTET, NAITA | 18 months | | |
| 33 | Fishing Vessel Skipper | Aquatic Resource Studies | OU | 12 months | | Only for Boys. Training opportunities extremely limited |

